

அமைச்சர் ராஜவேலுவை பிரான்சு நாட்டு குழுவினர் சந்தித்து பேசியபோது எடுத்த படம்.

### கிராமிய சுற்றுலாவை மேம்படுத்துவது குறித்து

# அமைச்சர் ராஜவேலு பிரெஞ்சு குழுவினருடன் ஆலோசனை

புதுச்சேரி, பிப்.3-

கிராமிய சுற்றுலாவை மேம்படுத்துவது தொடர்பாக பிரெஞ்சு குழுவினருடன் அமைச்சர் ராஜவேலு ஆலோசனை நடத்தினார்.

## கிராமிய சுற்றுலா

புதுச்சேரி அரசுக்கும் பிரான்சு நாட்டின் இலே-விலானே மாகாண சபைக்கும் இடையே புதுச்சேரியில் கிராமிய சுற்றுலாவை மேம்படுத்துவதற்கான ஒப்பந்தம் 2012-ம் ஆண்டு கையெழுத்தானது. ஒப்பந்தத்தின் தொடர்ச்சியாக சுற்றுலாத் துறை மூலம் தயாரிக்கப்பட்ட கிராமிய சுற்றுலா மூல திட்டத்திற்கு இலே-விலானே மாகாண சபை ஒப்புதல் அளித்ததோடு நிதியுதவியும் வழங்கியுள்ளது.

இத்திட்டம் தொடர்பாக பிரான்சு நாட்டிலிருந்து இலே-விலானே மாகாணத்தின் துணைத்தலைவர் டாஸ்கான் மென்ரியர் தலைமையிலான குழுவினர் அமைச்சர் ராஜவேலுவை சந்தித்து பேசினார்கள். அப்போது அவர்கள் கிராமிய சுற்றுலாவை மேம்படுத்துவது தொடர்பாக ஆலோசித்தனர். இந்த ஆலோசனையின்போது சுற்றுலாத் துறை செயலாளர் மிகிர் வர்தன், இயக்குனர் முனுசாமி ஆகியோர் உடனிருந்தனர்.

இந்த ஆலோசனைக்குப் பின் அமைச்சர் ராஜவேலு நிருபர்களிடம் கூறியதாவது:-

## சின்வீர் பீச்

கிராமப்புற சுற்றுலா மேம்பாட்டு திட்டத்தின்படி முதல்கட்டமாக இலே-விலானே மாகாண சபை சின்னவீராம்பட்டினத்தில் சின்வீர் பீச் என்ற பெயரில் திட்டத்தை செயல்படுத்தியுள்ளனர். அங்குள்ள கடற்கரையோரம் ரூ.34 லட்சம் செலவில் நடைபாதை, சிறுவர் பூங்கா, கழிப்பறை உள்ளிட்ட வசதிகளை செய்து கொடுத்துள்ளனர். அடுத்தகட்டமாக ஆலங்குப்பத்தில் இத்திட்டத்தை செயல்படுத்த உள்ளனர்.

இவ்வாறு அமைச்சர் ராஜவேலு கூறினார்.

CS Scanned with CamScanner